1979 ஏப்ரல் 23] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

பணியாற்றுகின்ற அவர்கள், மத்திய வங்கியின் ஊழியர்களாகத் தாங்கள் ஆக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இதிலே இந்த 53 பேர்கள் எடுக்கப்பட்ட நிலையைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் இந்த அரசு ஒரு நடைமுறையில் இப்படிப்பட்ட மத்திய வங்கியிலோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களிலோ ஆட்கள் எடுக்கின்றபோது, வேலைவாய்ப்பு நிலையத்தின் மூலமாகத்தான் எடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு விதிகூட இருக்கிறது. அவைகளை எல்லாம் இந்த அரசு பரிசீலனை செய்த பிறகு, இப்படிப்பட்ட இந்தப் பிரச்னையிலே ஈடுபட்டிருக்கின்றது என்பதை நான் சொல்லிக் கொண்டு, இப்படி எல்லோரையும் மத்திய வங்கியில் எடுத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு மத்திய வங்கிக்கு நிதி ஆதாரம் சரியாக இல்லை. எனவே அத்தகைய வாய்ப்புகள் இல்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

4. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்—1972–73.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

1972-73 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1975-76 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1972-73 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக்கணக்கு ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1972-73 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 9.26 கோடி ரூபாயாக இருக்கிறது. ''மருத்துவம்'' என்பதன்கீழ் அதிகச் செலவு, வரப்பெற்ற வைப்புத் தொகைகளை விட பிற துறைப் பணிக்கான உதவித் தொகை முன்னிட்ட

மிகைச் செலவு, இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் நிறுவனத்தார் 1973 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் வெளியிட்ட உருக்கு அளவில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு, மேலும் பலருக்கு ஒய்வூதியம் அனுமதித்தது, இந்திய அரசு வழங்கிய இரசாயன உரங்களுக்குரிய செலவைச் சரிக்கட்டியதனால் ஆண்டு இறுதியில் எதிர் பாராது ஏற்பட்ட ஒரு சில செலவினங்கள் ஆகியவை இவ் வகையில் ஏற்பட்ட முக்கிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1972-73 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

5. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்–1973-74.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

1973–74 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1977-79 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1973–74 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப் பேரவை முன்வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரைசெய்தது. அவ்வண்ணமே 1973-74 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 6·97 கோடி ரூபாயாக இருக்கிறது. முக்கியமாக ''மருத்துவம்'', ''தொழில்கள்'' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. கூவம் ஆற்றுப் பராமரிப்பு, முக்கியமான சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகள், மேலும் பலருக்கு ஒய்வூதியம் அனுமதித்தது ஆகியவை